ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை

+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257

communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் நாணயத் திணைக்களம்

திகதி 2020.12.31

## இலங்கை மத்திய வங்கி அதன் 70 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக சுற்றோட்டத்திற்கு விடப்படாத ஞாபகார்த்த நாணயக் குற்றியொன்றினை வெளியிடுகின்றது

இலங்கை மத்திய வங்கியானது 1950 ஓகத்தில் அதன் தொழிற்பாடுகளைத் தொடங்கி இலங்கையின் சுபீட்சத்திற்கு அதன் தனித்துவமும் பெறுமதிவாய்ந்ததுமான பங்களிப்பின் 70 ஆண்டுகளை நிறைவுசெய்துள்ளது. அதன் 70 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக இலங்கை மத்திய வங்கி, பின்வரும் முக்கிய அம்சங்களுடன் சுற்றோட்டத்திற்கு விடப்படாத ரூ.20 வகை ஞாபகார்த்த குற்றியொன்றினை வெளியிடுவதற்குத் தீர்மானித்துள்ளது.

| நாணயத்தின் முன்புறம் | நாணயத்தின் பின்புறம் |
|---|---|
| <br> | <br> |
| குற்றியின் முன்புறம் "70" என்ற இலக்கம் பெரிதாக தோன்றுவதுடன் கூடிய இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகக் கட்டடத்தின் உருவப்படத்தினை குற்றியின் மையத்தில் காட்டுகின்றது. "இலங்கை மத்திய வங்கி" என்ற சொற்கள் விளிம்பு ஓரத்தில் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் தோன்றுகின்றன. 1950-2020 என்ற வருடங்கள் குற்றியின் கீழ் விளிம்பு ஓரத்தில் குறித்துக்காட்டப்பட்டுள்ளன. | குற்றியின் பின்புறம், சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் "இருபது ரூபாய்" என்ற சொற்களுடன் "20" என பெரிய இலக்கங்களில் முகப்புப் பெறுமதியினையும் அதற்கு கீழ் "2020" என்ற வருடத்தினையும் காண்பிக்கின்றது. "இலங்கை" என்ற சொல் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் குற்றியின் மேல் விளிம்பு ஓரத்தில் தோன்றுகின்றது. |

| விபரங்கள் | | | |
|---|---|---|---|
| உலோகக் கலவை | அலுமினிய வெண்கலம் | வடிவம் | ஏழு கோணம் |
| குற்றியின் வகை | மின்னுகின்ற சுற்றோட்டம் செய்யப்படாதது | ஓரம் | தட்டை |
| விட்டம் | 28 மிமீ | தடிப்பு | 2 மிமீ |

முதலாவது நாணயக் குற்றியானது 2020.12.31 அன்று சனாதிபதி செயலகத்தில் மத்திய வங்கியின் ஆளுநர் தேசமான்ய பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன் அவர்களினால் இலங்கையின் சனாதிபதி அதிமேதகு கோத்தபாய ராஜபக்ஷ அவர்களுக்கு உத்தியோக பூர்வமாக வழங்கப்பட்டது.



இந்நாணயக்குற்றி உறுதிச் சான்றிதழ் ஒன்றுடன் கவர்ச்சிகரமான அன்பளிப்புப் பெட்டியொன்றினுள் வழங்கப்படுகின்றது. இது 3,000 குற்றிகளைக் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட வழங்கலொன்றாவதுடன் பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிசாலை, சென்றல் பொயின்ட் கட்டடம், இல. 54 சதம் வீதி, கொழும்பு 01 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை மத்திய வங்கியின் விற்பனைக் கருமபீடம் மற்றும் அநுராதபுரம், மாத்தளை, மாத்தறை, திருகோணமலை, கிளிநொச்சி மற்றும் நுவரெலியா இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்கள் ஊடாக ஒரு நாணயக் குற்றி ரூ.1,300 விலையில் விற்பனை செய்யப்படும்.

| மேலதிகத் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்: | தொலைபேசி | தொலைநகல் |
|---|---|---|
| நாணயக் கண்காணிப்பாளர் | +94 11 247 7355 | +94 11 247 7726 |
| மேலதிகக் கண்காணிப்பாளர் | +94 11 247 7152 | +94 11 247 7701 |
| மின்னஞ்சல் | currency@cbsl.lk | |
| பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிசாலை | +94 11 438 7405<br>+94 11 244 4503 | |
| பிரதேச அலுவலகங்கள்: | | |
| அநுராதபுரம் | +94 25 222 2024 | +94 25 222 5689 |
| மாத்தளை | +94 66 222 2167 | +94 66 222 2175 |
| மாத்தறை | +94 41 222 2269 | +94 41 222 2719 |
| திருகோணமலை | +94 26 222 6965 | +94 26 222 6967 |
| கிளிநொச்சி | +94 21 228 5912 | +94 21 228 5911 |
| நுவரெலியா | +94 52 223 5439 | +94 52 222 4294 |

நாணயக் கண்காணிப்பாளர்
நாணயத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01